**பத்திரிக்கைச் செய்தி**

**வழக்கை சாதகமாக முடித்து வைப்பதற்கு லஞ்சம் வாங்கிய காவல் ஆய்வாளர் அவர்களுக்கு 3 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு**

புகார்தாரர் திரு.செல்லையா என்பவர் திருச்சி மாவட்டம், விமான நிலையம் அருகே அரிசி ஆலை நடத்தி வருகிறார். அவரிடம் பணியாற்றிய திருமதி.ரம்யா என்பவர் தன்னை அடித்ததாக புகார்தாரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய திருச்சி விமானநிலையம் காவல் நிலையத்தில் 07.08.2009 அன்று புகார் மனு அளித்தார். இந்த வழக்கை விசாரணை செய்த திரு.முருகேசன், காவல் ஆய்வாளர், விமானநிலையம் காவல் நிலையம், திருச்சி நகரம் அவர்கள் 11.08.2009 அன்று தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, புகார்தாரருக்கு சாதகமாக வழக்கை முடித்து வைப்பதற்காக தனக்கு லஞ்சமாக ரூ.5,000/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் திருச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.முருகேசன், காவல் ஆய்வாளர் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் திருச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.முருகேசன், காவல் ஆய்வாளர் அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.5,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது திருச்சி மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 10.11.2022 இவ்வழக்கில் குற்றவாளி திரு.முருகேசன், காவல் ஆய்வாளர் அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.5,000/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 1 வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 3 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து, இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.